# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## பாடம் - 2

# இயேசு எவ்வாறு உலக ரட்சகர் ?

## பாகம் - 2



Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## மீட்கும் பொருள் - பாகம் 2
## The Study of RANSOM



கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

நாம் முதல் பாகத்தில் , சிலுவையைப்பற்றிய இரகசியம் என்னவென்று நாம் அறிந்தோம். மேலும், **யோவான் 12:32** இல் கூறப்பட்ட இயேசு தாம் சரிநிகரான விலைக்கிரயமாகிய மீட்கும்பொருளை பலியாக செலுத்துவதன் மூலம் எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்ற வசனத்தின் பொருளை நாம் ஆராய்ந்தோம்.

**மாற்கு 10:45 இல், '..மனுஷகுமாரனும்..அநேகரைமீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்"**

அநேகர் என்று மேற்கண்ட வசனத்தில் குறிப்பிடப்பட்டது, முழு உலக மனுக்குலத்தையும் குறிக்கிறது என்று அறிந்தோம். இதனை **1தீமோத்தேயு 2:5,6** ல் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.



**1தீமோத்தேயு 2:5,6 'தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே.."**

இந்த மீட்கும்பொருள் அல்லது சரிசமமான ஈட்டுத்தொகை , ஒரு மனிதனாகிய ஆதாமுக்காக செலுத்தப்பட்டது. ஆதாமுக்குள் உலக மனுக்குலம் முழுவதும் மரணத்தீர்ப்பை சுதந்தரித்துக்கொண்டது. இதனை **1கொரிந்தியர் 15:21,22** ல்

தெளிவாகக் காணலாம்.



**1கொரிந் 15:21,22 'மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல , கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்"**

ஒரு மனிதனாகிய ஆதாமின் மூலம் முழு மனுக்குலமும் மரணத்தீர்ப்புக்குள்ளாகியது. ஆனால் இரண்டாம் ஆதாமாகிய இயேசு கிறிஸ்துவுக்குள், அவர் தந்த பலியின் நிமித்தமாக, மரண சாபத்திலிருந்து மனுக்குலம் மீட்கப்பட்டு, ஜீவன் பெறுவதற்கான உரிமை தரப்பட்டுள்ளது. ஆதலால், கிறிஸ்துவுக்குள் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். இது ஒன்றுக்காக- மற்றொன்று என்ற கொள்கையை அடிப்படையாகக்கொண்டது. எவ்வாறு இக்கொள்கை நிறைவேறுகிறது என்று பார்ப்போம்.

ஆதாமின் மூலம் மனுக்குலமும் பாவிகளாகி, மரணத்தீர்ப்புக்கு உட்படுவதுபோல, ஆதாமுக்காக செலுத்தப்பட்ட மீட்கும்பொருளாகிய ஈட்டுக்கிரயத்தால், முழு மனுக்குலமும் ஆதாமோடு சேர்ந்து விடுதலை பெறுவார்கள். இதுவே, மனுக்குலத்திற்கான தேவனின் தெய்வீகத் திட்டம். கடந்த வாரத்தில் நாம் பார்த்தவாறு, இயேசு மீட்கும் பொருள் அல்லது ஈடுபலியாக 2000 வருடங்களுக்கு முன்பே கல்வாரி சிலுவையில் தன்னையே ஒப்புக்கொடுத்தும், ஏன் இன்னும் மனுக்குலம் உயிர்பெறவில்லை?

ஏனெனில் தேவனுடைய தெய்வீகத் திட்டத்தை நாம் சரிவர புரிந்துகொள்ளவேண்டும். விழுந்துபோன பாவ மனிதர்களே விலைக்குரிய பணத்தைத் தரும்போது, உடனே அதற்குரிய பொருளைத் தருகிறார்களே, சர்வ ஞானமுள்ள தேவன் அவ்வாறு செய்யாதிருப்பாரா? வேத வசனங்களை ஆராயும்போது, ஈடுபலியின் பலனானது தேவனுடைய திட்டத்தில் இரு படிகளாக (Two steps) நிறைவேறுவதை தெளிவாகக் காணலாம்.

**1யோவான் 2:2 - நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்.**

இங்கு 1) **நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்தல் 2) சர்வலோகத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்தல்**

ஆக இந்த இருபடிகளில் முதலாவதாக,**'நம்முடைய"** என்றழைக்கப்படும் வகுப்பார் யாரெனில், பொதுவாக கூறும்போது, கிறிஸ்தவ ஜனங்களைக் குறிக்கும்.

**அப்10:43இல்-அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன்அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள்**

இயேசுவின்மேல் விசுவாசம் வைக்கிற எவருக்கும் பாவமன்னிப்பு உண்டென்பதை இவ்வசனத்தில் காணலாம். இம்மாதிரியான கிருபை இயேசுவுக்கு முன்பிருந்த காலத்தில் அனைவருக்கும் கிடைக்கப்பெறவில்லை. மேலும் கிறிஸ்தவன் எனும்போது, கிறிஸ்துவின் சபை வகுப்பாரையே குறிப்பிட்டுச் சொல்லலாம்.

ஆக, இயேசுவினுடைய ஈடுபலியின் மூலம் முதலில் பலனடைவது அவருடைய சீஷர்களே ஆவர்.

**ரோமர் 4:7இல்- 'எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ அவர்கள் பாக்கியவான்கள்".**

அதேபோல **எபேசியர் 2:2இல்,**

**'நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள்".**

மேலும் **தீத்து 2:14இல்,**

**'அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்".**

அங்கே **'நமக்காக"** (பரிசுத்தவான்களுக்காக) எனும் வார்த்தையை கூர்ந்துகவனிக்கவேண்டும். சபையின் இரட்சிப்பானது இந்த சுவிசேஷ அல்லது கிறிஸ்தவ யுகத்திலேயே நடைபெற்றுவருகிறது. சபையைப்பற்றி, கிறிஸ்துவின்சபை மூன்று பாகங்களில் விரிவாகக் காணலாம். சபையினுடைய இரட்சிப்பு முடிவடைந்தபின், சர்வலோகத்தின் இரட்சிப்பு ஆரம்பமாகும். இது மூன்றாம் உலகத்தில் நடைபெறவேண்டியதாகும்.

இது பற்றி இப்பாடத்தில் தெளிவாகக் காணலாம்.
இப்போது நாம் **ரோமர் 8:20,21** வசனங்களை ஆராய்வோம்.

**ரோமர் 8:20,21 'சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே,அந்த சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது"**

இவ்வசனம் என்ன பொருள் தருகிறது? இதன் மொழி கடினமாய் உள்ளதாய்த் தோன்றுகிறதா? இங்கு **'சிருஷ்டி"** என்பது - முழு மனுக்குலத்தையும் குறிக்கிறது. அது மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. அல்லது வேறுவகையாய்ச் சொல்வோமானால், பாவம் மரணத்தை சுதந்தரித்த நிலையிலுள்ளதைக் குறிக்கிறது.

ஒவ்வொரு மனிதனுக்கும் இவ்விஷயத்தில் சுதந்திரம் கொடுக்கப்படாமல், ஆலோசனை கொடுக்கப்படாமல், சிருஷ்டிகரால் இந்நிலையை அடைந்தது.

தேவத்திட்டத்தினால், தேவனால் மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கையில் அப்படியுள்ளது. இவ்வசனமானது, ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கின்ற காலப்பகுதியைக் குறிக்கின்றது. தேவன் இவ்வாறு செய்தது சரியானதா?

குழந்தைகள் பிறக்கும் முன்னரே, அவர்களது ஆலோசனையைக் கேளாமலே, அவர்களது பிற்காலத்தைக் குறித்த திட்டங்களை முன்கூட்டியே தீர்மானிப்பது பெற்றோரின் வழக்கமாய் இருக்கிறதல்லவா - குழந்தைகளுக்கான நல்ல எதிர்காலத்தை முன்னிட்டே இவ்வாறு திட்டமிடுகின்றனர். அவ்வாறே தேவனும், அவர் சிருஷ்டிப்புகள் அனைத்திற்கும் தந்தையாய் இருக்கிறபடியால் **(எபேசியர் 3:14,15)** , தம் மனுக்குலக் குழந்தைகளுக்காக தேவன் ஒரு ஏற்பாடு செய்துவைத்திருக்கிறார்.

**ரோமர் 8: 20** ஐ ஆராய்வோம்

> **'சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே.."**

இம்மீட்பு இயேசுகிறிஸ்து சிலுவையில் தந்த மீட்கும்பொருளால் கிடைத்தது. தேவப் பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனம் என்பது எதைக்குறிக்கும், தேவப்பிள்ளைகள் பாவம், மரண நிலையிலிருந்து நீக்கப்பட்டு, தேவன் ஏற்பாடு செய்திருக்கின்ற இரட்சிப்பினை அடைவதே அவர்களது மகிமையான சுயாதீனமாகும். இது எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது என்பதை **1தீமோத்தேயு 2:3,4** இல் உரைக்கிறது.

> 1தீமோத்தேயு 2:3,4 -**'நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாய் இருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறா**

இதுவே, உலக மனுக்குலத்திற்கான தேவனுடைய சித்தம்.

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படுதல் என்றால் - பொதுவாக இவர்கள் இரட்சிப்படைந்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவர் என்று நினைக்கின்றனர். ஆனால் இவ்விடத்தில், இரட்சிப்படைந்த அனைவரும் பரலோகத்திற்குச் செல்வார்கள் என்று பொருள்தருவது எவ்விதத்திலும் பொருந்தாது. இன்னுமொரு அர்த்தமும் இவ்வசனத்திற்குத் தரப்படுகிறது. முதலாவதாக, சத்திய அறிவினைப் பெற்றவர்கள், இரட்சிப்பினைப் பெற்று பரலோகத்தை சுதந்தரிக்கிறார்கள் என்பதே. ஆனால் எல்லோரும் பரலோகத்தை அடையாமல், முதலாவதாக இரட்சிப்படைபவர்களே பரலோகத்தை அடையமுடியும் என்பதே இரண்டாவது விளக்கம். ஏன் அவ்வாறு என்று விளக்கமாகக் காண்போம்.

எல்லா மனிதரும் இரட்சிப்படையவும் என்பதன் பொருள் என்ன? இது, எல்லா மனிதரும் தற்போது மரண நிலையில் இருக்கிறார்கள் என்பதைக் குறிக்கிறது. மீட்கும்பொருளின் மூலம் எல்லா மனுஷரும் ஜீவன் பெறுவார்கள்

> **அப்24:15ல்,-'நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர்உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறது..."**

## உயிர்த்தெழுதல் என்றால் என்ன?

இது மற்ற மதங்களுக்கு முழுவதுமாக மறைக்கப்பட்டு, வேதாகமத்தில் மாத்திரம் போதிக்கப்படும் உபதேசம் அல்லது போதனையாகும். அதே சமயம் மற்ற மதங்களில்,

இந்து மதம், புத்தமதம் போதிப்பதுபோல தாயின் கர்ப்பத்திலிருந்து மறுபிறப்பின்மூலம் மரணத்திற்குப் பின் உள்ள ஜீவனுக்காக மற்றொரு வாய்ப்பை பற்றிப் பேசுகின்றன.

அல்லது இஸ்லாமியர் நம்புகிறபடி, ஆவியின் நிலையில் 'பரதீஸில்" உள்ள வாழ்வு அல்லது கிறிஸ்தவர்களுடைய வேதாகமத்தில் உள்ள வேறுபட்ட போதனையான உயிர்த்தெழுதல் பற்றியும் பேசுகின்றன.

ஆனால் இது தேவன் தம்முடைய சர்வ தெய்வீக வல்லமையை பிரயோகித்து எவ்வாறு மரித்து , அழிந்துபோன நிலைமையில் இருப்பவர்களை மீண்டுமாக ஜீவனுள்ள நிலைமைக்கு திரும்ப கொண்டு வருவார் என்பதைப் பற்றிக் கூறுகிறது. தேவனுடைய வல்லமையானது மனுஷ ஜாதியை மரிக்கும் தருவாயிலிருந்த முழு சரீரம் மற்றும் மனநிலையில் திரும்பக் கொண்டுவரும்.
இது ஒரு நம்பமுடியாத அற்புதமாகும்.

வயதானவர்கள் தாங்கள் மரிக்கும் தருவாயில் இருந்த முதிய நிலையிலே உயிர்த்தெழுப்பப்படுவார்கள்.

மேலும் வாலிபர்கள் தாங்கள் மரிக்கும் தருவாயிலிருந்த நிலைக்கே உயிர்த்தெழுப்பப்படுவார்கள்.

குழந்தைகளும் சிறு பிள்ளைகளும் அவர்கள் மரிக்கும் தருவாயில் இருந்த அதே குழந்தை பருவத்தில் உயிர்த்தெழுப்பப்படுவார்கள்.

இங்கு உயிர்த்தெழுதல் என்ற வார்த்தை 'அனஸ்டசிஸ்" என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருவதாகும்(ஸ்ட்ராங்ஸ் அகராதி - 386) இதற்கு 'ஜீவனுக்கு எழுதல்" அல்லது 'மீண்டு எழுதல்" என பொருள்படும்.

இப்படியாக 'உயிர்த்தெழுதல்" என்பது மரித்த நிலையில் இருந்து ஜீவனுள்ள நிலைக்குத் திரும்புகிற மாபெரும் அற்புதத்தை மாத்திரம் உண்மையில் பொருள்படுத்தாமல், ஆதாமுக்குள் இழந்துபோன பரிபூரண நிலைக்கு திரும்ப சீர்பொருந்தப் பண்ணுவதை குறிப்பதாகும்.

ஆம். உயிர்த்தெழுதல் என்பது'மரித்த நிலையில் இருந்து விழிப்பதில்" துவங்கும் ஒரு தொடர் செயலாகும்.

இப்படியாக 'உயிர்த்தெழுதல்" என்பது மரித்தநிலையில் இருந்து ஜீவனுள்ள நிலைக்குத் திரும்புகிற மாபெரும் அற்புதத்தை மாத்திரம் உண்மையில் பொருள்படுத்தாமல், ஆதாமுக்குள் இழந்துபோன பரிபூரண நிலைக்கு திரும்ப சீர்பொருந்தப் பண்ணுவதை குறிப்பதாகும்.

இப்படியாக அனைவரும் மரணத்திலிருந்து எழுப்பப்படுவர். இதை கர்த்தராகிய இயேசுவும் போதித்திருக்கிறார் :

> **யோவான் 5:28 ' இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம். ஏனென்றால், பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்"**

மரித்தோரை உயிர்த்தெழுப்பும் அந்த மாபெரும்நாளே இங்கு பேசப்பட்டிருக்கிறது. இன்றைக்கு எப்படி ஆதாமுக்குள் மனுஷன் மரிக்கிறானோ, அதுபோலவே உயிர்த்தெழுப்பப்படும் அந்நாளில், கிறிஸ்துவுக்குள் அனைவரும் ஜீவன் பெறுவர்.

புதிய ஏற்பாட்டில் மட்டும் உயிர்த்தெழுதலின் போதனை கூறப்படாமல், பழைய ஏற்பாட்டிலும் ஏசாயா **26:19** ல் எழுதப்பட்டுள்ளது :

'மரித்த உம்முடையவர்கள் பிரேதமான என்னுடையவர்களோடே கூட எழுந்திருப்பார்கள், மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே, விழித்துக் கெம்பீரியுங்கள், உம்முடைய பனி பூண்டுகளின் மேல் பெய்யும் பனிபோல் இருக்கும்,
**மரித்தோரைப் பூமி புறப்படப்பண்ணும்"**

ஆம் **'மரித்தோர் பூமியின் தூளிலிருந்து எழுவார்கள்"** என்பது இங்கு தெளிவாகிறது. இதைக் குறித்து **தானியேல் 12:2இல் கூறப்படுகிறது :**

**தானியேல் 12:2 'பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்தெழுந்திருப்பார்கள்"**

இவ்வாறாக தேவன் எல்லா மனுஷருக்கும் மரணத்தினின்று மீட்டு, இரட்சிப்பை அருளுகிறார்.

**1தீமோத்தேயு 2:4இல், '.. சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும்..."**
இது இரட்சிப்படைவதற்காக தேவன் வைத்திருக்கிற வழிமுறையின் இரண்டாம் படியாகும். மனுக்குலம் முழுவதும் பாவத்தினிமித்தம் மரணமடைகிறது. பின்னர் அவர்கள் உயிர்ப்பிக்கப்படும்போது, அதே சுபாவநிலையிலேயே ஜீவனைப் பெறுவார்கள்.

அதன்பிறகே அவர்கள் பாவத்தினின்று விடுதலை அடையவேண்டியிருக்கிறது . எப்படி என **யோவான் 17:17 ல் கூறுகிறது -**

**'உம்முடைய வசனத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம்"**

இவ்வாறு, பாவநிலையினின்றும், பாவ குணங்களிலிருந்தும் சத்தியத்தினால் சுத்திகரிக்கப்பட்டு பரிசுத்தமாகிறார்கள்.

தேவ வார்த்தையிலுள்ள ஞானம், சத்தியம் இவைகளுக்கு கீழ்ப்படிவதன்மூலம், பாவ வழிகளிலிருந்து சுத்திகரிக்கப்பட்டு பரிசுத்தமடைகிறார்கள். (உதாரணமாக) கெட்ட பேச்சுக்கள் பேசுவது, சுயநலம், ஏமாற்றுதல், பொய்பேசுதல், போன்றவைகளிலிருந்து சுத்திகரிக்கப்படுதல்.

இவ்வாறு மரித்த அனைவரும் உயிர்த்தெழுப்பப்பட்டு, சத்தியத்தை அறிகிற அறிவைப்பெற்று, முழு உலகமும் நிரப்பப்படவேண்டும் . அந்த நிலைமை**ஆபகூக் 2:14 உரைக்கிறது.**

ஆபகூக் 2:14 - 'சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல பூமி கர்த்தருடைய
**மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்"**

ஆம். தேவ வார்த்தையாகிய வேத அறிவினால் முழு மனுக்குலமும் நிறைந்திருக்கும். மேலும் ஏசாயா 11:19இல் இது உறுதிப்படுத்தப்படுகிறது .

‘என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை,
சமுத்திரம் ஜலத்தினால்நிறைந்திருக்கிறது போல், பூமி
கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்”

இது எவ்வாறு என்று நீங்கள் கேட்கலாம். அது நிறைவேறும் விதம் நம் கண்களுக்கு முன்பாக இருக்கிறது. நீங்கள் காண்கிறீர்களா?

















இன்று தகவல் மற்றும் அறிவு பரிமாற்றங்கள் ஒவ்வொரு வீட்டிலும் மிக வேகமாக வானொலி, தொலைக்காட்சி, இணையதளம், விசிடி, டிவிடி, மற்றும் சிடி மூலமாக எடுத்துச்செல்லப்படுகிறது. புத்தகங்களுக்கு பதிலாக ஒளி-ஒலி சாதனங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த தொழில் நுட்ப முன்னேற்றத்தை கடந்த 70-80 வருடங்களில் பெற்றிருக்கிறோம். இது அந்த ஆசீர்வாதமான காலத்திற்கு வெகு அருகாமையில் இருப்பதை உணர்த்துகிறது. உண்மையில், இந்த பரந்து விரிந்த உலகில் மேற்சொன்ன வசனத்தின் நிறைவேறுதல் நம்முடைய கண்களுக்கு முன்பாக நாளுக்குநாள் தெளிவாகிறது.

இது எப்படியிருக்குமென்றால், அதிகாலை விழித்தெழும்போது, நம் வீட்டைச் சுற்றிலும் கேமரா, விளக்குகள், ஜெனரேட்டர் வண்டிகள், இருக்கைகள் போன்றவை இருக்க. அருகில் ஒருவரும் இல்லாததை பார்ப்பதைப்போல இருக்கும். அந்நிலையில் ஒருவர் என்ன நினைக்கக்கூடும்?ஆம். விரைவில் இங்கு திரைப்பட ஒளிப்பதிவு நடக்கஉள்ளது என்றே நினைப்பார். ஏனென்றால், அவர் கண்ட பொருட்கள் அவரை இந்த முடிவுக்கு வழிநடத்தும்.

அதுபோலவே இன்று இவ்வளவு விஞ்ஞான மாற்றங்களும், தகவல்களை மிக குறுகிய கால இடைவெளியில் , பரந்து விரிந்த பகுதிகளில் எடுத்துச்செல்லும்போது தோன்றும். ஆம்

‘சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல பூமி
கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்”

காலம் வெகு அருகாமையில் உள்ளது. இப்படிப்பட்ட அந்த அருமையான காலத்தைக் குறித்து கீழுள்ள வசனத்தை வாசிப்போம்.

**எரேமியா31:34 ' இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை, அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்ளுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார், நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்".**

இவ்வாறாக, எல்லாரும் சத்தியத்தை அறிகிற அறிவினை அடைந்து, தாங்களாகவே பாவத்தைவிட்டு விடுதலைபெறுவர். இங்கு ஒரு முக்கியமான வினா எழலாம். உலகிலுள்ள அனைத்து மரித்தவர்களும், ஜீவனோடிருப்பவர்களும் இப்பூமியிலிருந்தால் அவர்கள் தங்குவதற்கு பூமியில் இடமிருக்குமா?

தேவன் இப்பூமியை சிருஷ்டிக்கும்போது, கொடுத்த கட்டளையை நினைவுகூர்வோம்

**ஆதியாகமம் 1:28இல்,'பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்"**



குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் பூமியை ஜனத்தொகையால் நிரப்ப தேவன் ஒருக்காலும் கட்டளையிடவில்லை. இரு சினிமா தியேட்டரில் டிக்கெட் கொடுப்பவருக்கு, எத்தனை நபர்களை தியேட்டருக்குள் அனுமதிக்கவேண்டும் என்று நன்கு தெரியும்.

குறிப்பிட்ட எண்ணிக்கையளவு டிக்கெட் விற்பனையானவுடன், விற்பனையை நிறுத்திவிட்டு, ஹவுஸ்புல் போர்டை மாட்டிவிடுகிறார் அல்லவா! அதுபோலவே, தேவனும் பூமியில் குறிப்பிட்ட எண்ணிக்கை நிரம்பியவுடன் மனுக்குல சந்ததி பெருகாதபடி தடைசெய்துவிடுகிறார். அது இப்போதே நடந்துவருகிறதை இவ்வுலகில் காண்கிறோம். குடும்பநலத்துறைகள் மூலம் பல்வேறுவகையில் மக்கள்தொகை கட்டுப்பாடு செய்வதுடன், மக்களே அதை மனப்பூர்வமாக செய்கின்றனர்.

ஆதாமின் குடும்பத்தின் மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி, தற்கால உலகின் மக்கள்தொகை - 600 கோடி நபர்கள். ஆனால் கிபி 1840இல் உலக ஜனத்தொகை - 1கோடி மட்டுமே. கிபி 1840க்கு முன்பு இந்த எண்ணிக்கையை ஒருபோதும் உலகம் எட்டினதில்லை.

இதுவரை ஆதாம் குடும்பத்தின் முழுமக்கள் தொகையுமே எவ்வளவெனில் - 2500 - 3000




கோடி(இறந்தோர் + தற்போது வாழ்வோர்) இந்த எண்ணிக்கையை(3000கோடி)இரட்டிப்பாக்கி (6000கோடி),அதோடு இந்தியாவின் பரப்பளவு ஒப்பிட்டுக் கணிக்கும்போது,

இந்தியாவின் பரப்பளவு = 24 இலட்சம் சதுர கி.மீட்டர்
1சதுர கி.மீ = 10,00,000 சதுரமீட்டர்(1000 X 1000)
1சதுர மீட்டர் = 9சதுரஅடி(3' X 3')
ஆகவே, இந்தியாவின் பரப்பளவு(சதுரமீட்டரில்) =
24இலட்சம் X 10 இலட்சம்
= 2,400,000,000,000 சதுர மீட்டர்கள (2.4 ட்ரில்லியன் ச.மீ)
= 2,400,000,000,000 / 60,000,000,000
= 40 சதுர மீட்டர்கள்(ஒரு நபருக்கு) அல்லது 24 X 15அடி

முழு உலகத்திலும் தற்போதுள்ள மலைகள், ஏரிகள், காடுகள் போன்றவைகள் குடியிருப்புக்கேற்ற சம நிலங்களாக தேவன் மாற்ற திட்டமிட்டிருக்கிறார் எனும்போது, ஏராளமான இடங்கள் மனிதன் தங்கிவாழ ஏற்பாடாகியிருக்கும்.

அநேகரால் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகின்ற மற்றொரு வசனத்தை நாம் காணலாம்.

தீமை செய்தோர் ஆக்கினை அடைவது உண்மையா? ஏனெனில்,

**யோவான்3:17இல்,'உலகத்தை ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்"**

என்று பார்க்கிறோம். முழு உலகமும் ஏற்கனவே மரணத்தீர்ப்பில் உள்ளது. அந்த சாபத்திலிருந்து உலகினை மீட்கவே தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை உலகத்திற்கு அனுப்பினார். இந்த குறிப்பினை எடுத்துக்கொண்டு **யோவான் 5:29** ஐ ஆராயும்போது,

**யோவான் 5:29 - 'அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்"**

இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்ட கிரைசிஸ் (Crisis) என்ற கிரேக்கச்சொல்லானது, ஆக்கினைத்தீர்ப்பு என்றும், சபிக்கப்பட்ட என்றும் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இதன் உண்மையான பொருள், **Crisis** என்ற ஆங்கிலச்சொல்லின் பொருளே ஆகும். இதன்பொருள், நியாயத்தீர்ப்பு, நியாயத்தீர்ப்பின் காலம் என்பதாகும்.

(உதாரணம்)- மருத்துவமனையின் அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கிற ஒருவர், உயிர் பிழைத்தல் அல்லது மரித்தல் , இதில் ஏதாவது ஒரு நிலையை அடைய வேண்டியவராக - ஒரு நியாயத்தீர்ப்பின் காலத்தில் இருப்பதாக கருதப்படுகிறார். அவ்வாறே, தீமை செய்தவர்களாகிய மனுக்குலத்தார், நியாயத்தீர்ப்பிற்காக எழுந்திருப்பார்கள்.

இதுவே உலகின் நியாயத்தீர்ப்பின் நாளில் நடக்கப்போகிறது. நியாயத்தீர்ப்பின் நாளைக்குறித்து நாம், இவ்வாறு வாசிக்கிறோம்



**அப்போஸ்தலர் 17:31இல், 'மேலும் அவர் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லோருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்"**

நியாயத்தீர்ப்பின் நாளிலே நீதிபதியாக இருந்து நியாயந்தீர்க்கிறவர் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே . இந்த நாள் - 24 மணிநேரங்களைக்கொண்ட காலப்பகுதியா?

**2பேதுரு 3:8இல், கர்த்தருக்கு ஒரு நாள் என்பது 1000 வருடங்கள்** என்று வாசிக்கிறோம். ஆகவே நியாயத்தீர்ப்பின்நாள் 1000 வருடங்கள் என்பது நிச்சயமாகிறது.

இந்த நியாயத்தீர்ப்பின்நாள் எவ்வாறிருக்கும்?

**தானியேல் 12:2-'பூமியின்தூளிலேநித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்"**

நித்திய தண்டனை என்பதற்குப்பொருள் என்ன?

இங்கு நித்திய காலம் என்று தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதன் எபிரேயச்சொல் ஓலாம்(Olam). இதன்பொருள் - யுகம்
(Age - lasting) என்பதாகும்.

இது ஒரு காலப்பகுதியைக் குறிக்கிறது. நித்திய காலத்தையல்ல, இக்காலப்பகுதியில், எல்லா மனுஷர் செய்த தவறுகள், ஊழல்கள், வஞ்சனைகள் அனைத்தும் அறியப்பண்ணப்படும். இதைக்குறித்து கீழுள்ள வசனங்களில் கூறப்பட்டுள்ளதை வாசிப்போம்:

**லூக்கா12:2,3 - வெளியாக்கப்படாதமறைபொருளுமில்லை,அறியப்படாதஇரகசியமுமில்லை. ஆதலால் நீங்கள் இருளிலே பேசினது எதுவோ, அது வெளிச்சத்திலே கேட்கப்படும். நீங்கள் அறைகளில் காதிலே சொன்னது எதுவோ, அது வீடுகளின்மேல் கூறப்படும்"**

**பிரசங்கி 12:14 - ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்"**

ஓ எப்பேர்ப்பட்ட நாள் அது ஒவ்வொரு தனிமனிதரின், குடும்பத்தின், தேசங்களின் இரகசிய ஊழல்கள் அனைத்தும் வெளிப்படுத்தப்படுவதை கற்பனை செய்துபாருங்கள்

இயேசுவின் மீட்கும்பொருளைக் குறித்த இன்னுமொரு காட்சியைப் பாருங்கள்

**கலாத்தியர் 4:4இல், 'நாம் புத்திர சுவிகாரத்தையடையும்படி, நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக..."**

இயேசு நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவராக, பரிபூரணராக அதனை நிறைவேற்றி, அதன் பரிசை அடைந்தார். நித்திய மனித ஜீவிய உரிமைகளை இழந்து, உலகத்திற்கு ஜீவன் பெற்றுத்தந்தார் **(லேவி 18:5 மற்றும் கலாத்தியர் 3:12)**மேலும் **யோவான் 6:5இல்,**

**'நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே"**

ஆகவேதான்,

**1தீமோத்2:5,6இல், 'எல்லோரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே"**

என்று வாசிக்கிறோம்.

இயேசுகிறிஸ்து ஒரு ஆவிக்குரிய ஜீவியாயிருந்து, தமது ஜீவனுக்குரிய உரிமைகளை பலியாக்காமல், பரிபூரண மனித சுபாவத்திலேயே தன்னை தியாக பலியாக்கினார்.

நமது கர்த்தர் மரித்தபிறகே, உயிர்த்தெழுப்பப்பட்ட நிலையில், ஆவிக்குரிய ஜீவியாக அல்லது பரலோக ஜீவியாக இருக்கிறார். இனி ஒருபோதும் மனிதனாக இருக்கமுடியாது.

**1பேதுரு 3:18இல்,'கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி, அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக, நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார். அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டா**

இவ்வாறாக, நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒரு ஆவிக்குரிய ஜீவியாக ஆதாமினை மீட்கும்பொருளாக தமது பரிபூரண மனித ஜீவியத்தை பலியாக்கினார்**(2கொரிந் 5:16)**

உலகம் இனிமுதற்கொண்டு தம்மை மாம்சத்தில் காணாது என்பதை இயேசு தாமே ஊர்ஜிதமாய்க் கூறியுமிருக்கிறார்.

**'இன்னும் கொஞ்ச காலத்திலே உலகம் என்னைக் காணாது(யோவான் 14:19).**

இறுதியாக, நம் கர்த்தராகிய இயேசுவையும் அவர் தந்த ஈடுபலியையும் பற்றிய இன்னுமொரு தோற்றத்தைப் பார்க்கலாம்.

**ஏசாயா 53:10 இல்,' கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி,... அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு நீடித்த நாளாயிருப்பார், கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்"**

இங்கு **'சந்ததி"** என்னும் வார்த்தை கர்த்தருடைய சொந்த வாரிசுகளாகிய சந்ததியைக் குறிக்காமல், தாம் உயிர்த்தெழுப்பும் முழு மனுக்குலமாகிய ஆதாமின் சந்ததியையே தம்முடைய வாரிசுகளாக ஏற்றுக்கொள்வதினால், அவர்களுடைய 'நித்திய பிதாவும்" (ஏசா 9:6) ஆனார். எப்பேர்ப்பட்ட இரட்சகர் நமக்காகத் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிறார். அதன்பின்னர் பூமியானது அவரது மகிமையால் நிறைந்திருக்கும் (பிலிப்பியர் 2:10,11).



**தேவனுடைய கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக, ஆமென்.**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/bibleresearch/